[29th September 1958

Opening of a new Engineering College

***608 Q.**—**Sri A. VEDARATHNAM** : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) நம் மாகாணத்தில் புதிய இன்ஜினீரிங் காலேஜ் ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா ?

(ஆ) அப்படியானுல் எங்கே, எப்போது ?

(இ) எந்தெந்த ஜில்லாக்களிலிருந்து இதற்கு விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன ?

(ஈ) இன்ஜினிரிங் காலேஜ் ஏற்படுத்த ஆகும் மொத்த செலவு எவ்வளவு ?

(உ) இதில் அரசாங்கம் உதவும் மான்யம் எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) & (*b*) The opening of an Engineering College mainly depends upon the decision of the Government of India. However, a proposal for opening an Engineering College at Tuticorin (Tirunelveli district) is under examination.

(*c*) Application has come only from Tirunelveli district.

(*d*) Non-recurring—About Rs. 31 lakhs.

Recurring—About Rs. 4·4 lakhs.

(*e*) The State Government bear one-fourth of the non- recurring cost up to a maximum of Rs. 7·75 lakhs and also pay a recurring grant of one half of the approved net cost arrived at after deducting the income from tuition fees and the grant paid from the Government of India from the expenditure subject to a maximum of rupees one lakh during the plan period and the same formula will continue to apply even after Central grants cease to be received.e

Sri A. VEDARATHNAM : திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து மாத்திரம் விண்ணப்பம் வந்திருப்பதாகக் குறிப்பிட்டார்கள். தஞ்சை ஜில்லா போர்டு அங்கே ஒரு என்ஜினீரிங் காலேஜ் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறதே, அதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனைக்கு எடுத்துக்கொண்டதா ? அவர்கள் ரயில்வே செஸ் நிதியிலிருந்து அந்தக் காலேஜை ஏற்படுத்தவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிருர்களே, அதைப் பற்றி அரசாங்கம் என்ன முடிவுக்கு வந்திருக்கிறது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஒரே நிதியை வைத்து எத்தனை திட்டங்கள் ஏற்படுத்த முடியுமோ எனக்குத் தெரியவில்லை. வெறும் வருமானம் மட்டும் இருந்தால் போதாது. இது சர்க்காரே ஏற்படுத்தக்கூடிய காலேஜ்கள் அல்ல. தனிப்பட்டவர்கள் ஏற்படுத்தக்கூடிய காலேஜ்கள். ஆகையால், தனிப்பட்டவர்கள் இதற்கு முன்வந்தால், அப்பொழுதுதான் இதைக் கவனிக்க முடியும்.

Sri D. S. AUTHIMOOLAM : என்ஜினீரிங் காலேஜ் ஒன்று தூத்துக்குடியில் ஆரம்பிக்கப்படுவது குறித்து அந்த ஜில்லாவாசி என்ற முறையில் நான் அதை வரவேற்கிறேன். ஆனுல், தேர்தல் நடப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன்பு கனம் நிதி அமைச்சர் அவர்கள் தூத்துக்குடியில் இதை அறிவித்தார்கள். ஆகவே, தேர்தலுக்கு முன்பு அப்ளிகேஷன் சர்க்காருக்கு வந்ததா ? அல்லது தேர்தலுக்குப் பின்பு வந்ததா ?

29th September 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM: நான் அங்கே அறிவிக்கவில்லை. இதுமாதிரி என்ஜினீரிங் காலேஜ் ஆரம்பிப்பது என்பது ரொம்ப கஷ்டமான காரியம். ஆகவே, முதலிலே பாலிடெக்னிக் ஆரம்பிக்க முயற்சி செய்யுங்கள், அதற்குப் பின்னால் வேண்டுமானால் என்ஜினீரிங் காலேஜ் வைப்பதுபற்றி யோசனை செய்துகொள்ளலாம் என்றுதான் நான் சொன்னேனே தவிர, என்ஜினீரிங் காலேஜ் வைப்பதாக நான் சொல்லவில்லை. அதுவும் அங்கே தேர்தல் பிரசாரத்திற்காகப் பேசிய கூட்டத்தில் அல்ல. மாணவர்களுடைய கூட்டத்திலே—வோட்டு இல்லாதவர்கள் கூட்டத்திலே பேசியது.

SRIMATHI RAJATHI KUNJITHAPATHAM: திருநெல்வேலி ஜில்லாவில் தாளயூத்தில் இந்தியா சிமெண்ட் கம்பெனியார் பாலி டெக்னிக் ஒன்று நடத்துகிறார்கள். கனம் முதலமைச்சர் அவர்கள் அங்கு வந்திருந்தபோது, என்ஜினீரிங் காலேஜ் ஒன்று வைக்கவேண்டுமென்று அவர்கள் கேட்டுக்கொண்டார்கள். அது விஷயமாகக் கவனிக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது விஷயமாக இப்பொழுது விண்ணப்பித்துக் கொண்டால் கவனிப்பாரா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: அது தக்க சமயத்தில் கவனிக்கப்படும்.

Backward and Most Backward Classes

* 609 *Q.*—SRI T. S. RAMASWAMY PILLAI (on behalf of Sri M. Jangal Reddiar): Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are considering any proposal to include certain "Forward Communities" in the list of Backward Classes and to include certain "Backward Communities" in the list of Most Backward Classes; and

(*b*) if so, what are the Communities and their proposed classification?

THE HON. SRI P. KAKKAN: (*a*) No, Sir.

(*b*) The question does not arise.

SRI T. S. RAMASWAMY PILLAI: பாக்வார்டு, மோஸ்ட் பாக்வார்டு என்று சில சமூகங்களைக் குறிப்பிட்டிருந்தாலும், மிகவும் பிற் பட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்கள் உண்மையிலேயே அத்தகைய சர்ட்டிபி கேட் கிடைக்காமல் கஷ்டப்படுகிறார்கள். குறிப்பாக, "சாணார்" "நாடார்" போன்ற சமூகத்தினர் இத்தகைய சர்ட்டிபிகேட் கிடைக்காமல் கஷ்டப்படு கிறார்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI P. KAKKAN: எனக்கு அந்தத் தகவல் வரவில்லை.

SRI N. R. THIAGARAJAN: பின்தங்கிய, மிகப் பின்தங்கிய, மிக மிகப் பின்தங்கிய என்று இப்படியாகப் பின்னால் போய்க்கொண்டிருக் கிறோம். இவற்றை மாற்றி, ஏழை, பணக்காரன் என்ற இரு ஜாதிமட்டும் உண்டுபண்ணப்போவதாக டில்லியில் பேச்சுவார்த்தை நடந்ததா ? அப்படி யானால், அது எப்பொழுது அமுலுக்கு வரும் ?

THE HON. SRI P. KAKKAN: பரிசீலனை செய்து பின்னால்தான் தெரிவிக்கவேண்டும்.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR: பிற்பட்ட வகுப்பினர் பட்டியலில் இப்பொழுது இருக்கும் செங்குந்தர், தேவாங்கர், சௌராஷ்டிரர், வன்னியர் இதுபோன்ற சமூகங்கள் மிகவும் பிற்பட்டுப் பின்தங்கிய நிலையில்